# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## STC No.816/2024

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 1/PW- 1 |
| Name | : திரு. ஆனந்தன் |
| Father/Husband's Name | : ஏழுமலை |
| Village | : தலைமை காவலர் 187 |
| Taluk | : செங்கல்பட்டு நகர காவல் நிலையம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது தலைமை காவலராக செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.08.2023 அன்று எஸ்ஜ திரு. கோதண்டன், நான் மற்றும் காவலர் 1011 திரு.கார்த்திக் ஆகிய மூவரும் பாலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தேவனூர், ரெட்டிபாளையம், கரும்பாக்கம் ஆகிய கிராமங்களில் மாலை ரோந்து செய்து கண்காணித்து கொண்டிருக்கும் போது கொளத்தூர் தண்டுமாரியம்மன் கோயில் அருகே சந்தேகத்திற்கிடமாக ஒரு நபர் நின்று கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சித்தவரை நாங்கள் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து அவரது ஊர் பெயர், விலாசம் விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தனது பெயர் அருண் (எ) அருண்குமார் த/பெ. கண்ணன் என்று கூறினார்.

பின்னர் உதவி ஆய்வாளர் திரு.கோதண்டம் அவர்கள் அந்த நபரை சோதனை செய்து பார்க்க அவரது பேண்ட் பாக்கெட்டில் சுமார் 10 கிராம் வீதம் இரண்டு கஞ்சா

பொட்டலங்களை வைத்திருந்தார். அவை இரண்டும் சுமார் 20 கிராம் ஆகும். அவற்றை எடுத்து முகர்ந்து பார்க்க அது ஒரு நெடியுடன் மயக்கம் தரக்கூடியதாக இருந்தது. அதனை பற்றி அந்த நபரிடம் விசாரிக்க விற்பனை செய்வதற்காக கொண்டு வந்ததாக கூறினார். எவ்வித அனுமதியுமின்றி அரசால் தடைசெய்யப்பட்ட கஞ்சாவை விற்பனை செய்வதற்கு வைத்திருந்த குற்றத்திற்காக அவரை உதவி ஆய்வாளர் கைது செய்தும், அவர் வைத்திருந்த கஞ்சாவை பொது மக்கள் சாட்சிகள் யாரும் வராததால் போலிஸ் சாட்சியான நான் மற்றும் காவலர் கார்த்திக் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் மாலை 06.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.200/2023 பிரிவுகள் 8(c). 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் உதவி ஆய்வாளர் அவர்கள் வழக்கு பதிவு செய்தார்.

சாட்சியிடம் கைப்பற்றுதல் மகசர் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதிலுள்ள 1வது கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **அந்த கையொப்பம் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வெள்ளை கலர் பிளாஸ்டிக் பாக்கெட்டில் தலா 10 கிராம் வீதம் 2 பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டது. சாட்சியிடம் நீதிமன்றத்திலுள்ள வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டது. சாட்சி அவை தான் கைப்பற்றப்பட்டது என்று கூறுகிறார். மேற்படி வழக்கு சொத்து கைப்பற்றப்பட்ட நபரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும்.

எதிரியை அடையாளம் காட்ட வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**STC No.816/2024**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 2/PW- 2 |
| Name | : திரு. கே. கார்த்திக் |
| Father/Husband's Name | : வி.காசிராஜன் |
| Village | : Gr.II காவலர் 1011 |
| Taluk | : பாலூர் காவல் நிலையம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது Gr.II காவலர் 1011 ஆக பாலூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.08.2023 அன்று ரோந்து பணியில் உதவி ஆய்வாளர் திரு.கோதண்டன், தலைமை காவலர் 187 திரு.ஆனந்த மற்றும் நான் மூவரும் மாலை தேவனூர், ரெட்டிபாளையம், கரும்பாக்கம் ரோந்து பணியில் கொளத்தூர் தண்டுமாரியம்மன் கோயில் அருகே ரோந்து பணியில் இருக்கும் போது ஒரு நபர் எங்களை பார்த்து ஓட முயற்சித்த போது அவரை நாங்கள் பிடித்து விசாரிக்கும் போது அவர் முன்னுக்கு பின்னாக முரணாக பதில் கூறினார். பின்னர் அவர் பெயர் அருண் (எ) அருண்குமார் த/பெ. கண்ணன் என்று கூறினார். பிறகு அவரை சோதனை செய்து பார்க்க அவரது பேண்ட் பாக்கெட்டில் இரண்டு பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் தலா 10 கிராம் வீதம் கஞ்சா இருந்தது. எதற்காக அவர் கஞ்சா வைத்திருப்பதாக கேட்ட போது விற்பனைக்கு வைத்திருப்பதாக கூறினார். அங்கு பொது மக்கள் யாரும் இல்லாததால் என் முன்னிலையிலும், தலைமை காவலர் ஆனந்தன் முன்னிலையிலும் உதவி

ஆய்வாளர் கஞ்சாவை லேப்டாப் மூலமாக ஆவணம் தயார் செய்து கைப்பற்றினார். நான் தயார் செய்யப்பட்ட மகசரில் கையொப்பம் செய்தேன். சாட்சியிடம் கைப்பற்றுதல் மகசர் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதில் உள்ள 2 வது கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **அந்த 2 வது கையொப்பம் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரியை உதவி ஆய்வாளர் நிலையம் அழைத்து வந்தார். என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார். இவ்வழக்கு சம்மந்தப்பட்ட வழக்கு சொத்தை மாலை 05.30 மணியளவில் கைப்பற்றப்பட்டது. மேற்படி வழக்கு சொத்து அருண் என்ற நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டது வெள்ளை கலர் பிளாஸ்டிக் பாக்கெட்டில் தலா 10 கிராம் வீதம் 2 பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டது. சாட்சியிடம் நீதிமன்றத்திலுள்ள வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டது. சாட்சி அவை தான் கைப்பற்றப்பட்டது என்று கூறுகிறார். மேற்படி வழக்கு சொத்து கைப்பற்றப்பட்ட நபரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும்.

எதிரியை அடையாளம் காட்ட வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.